தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6
ந.க.எண்.13368/டி3/2013, நாள் .12.2013

------

பொருள் – தொடக்கக்கல்வி – அரசாணை (நிலை) எண்.179, 216 மற்றும் 234–ன்படி வழக்கு தொடர்ந்து தீர்ப்பாணை பெற்றவர்களால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது – தீர்ப்பாணை செயல்படுத்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கை முடிக்க கோரல் – சார்.

பார்வை
1. தமிழக தொடக்கக்கல்வி இயக்குநரின் ந.க.எண்.13368/டி3 /2013, நாள் 03.12.2013.
2. 04.12.2013 நாளில் பள்ளிக் கல்வி முதன்மை செயலரால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டம்.

------

அரசாணை (நிலை) எண்.179, 216 மற்றும் 234–ன்படி தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர் பணியில் தேர்வு நிலை / சிறப்பு நிலை குறித்து வழக்கு தொடர்ந்து தீர்ப்பாணை பெற்றுள்ளவர்களில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுத்துள்ளவர்களுக்கு நீதிமன்ற தீர்ப்பாணையை செயல்படுத்தி உரிய ஆணைகள் சார்ந்த உதவித் தொடக்கக்கல்வி அலுவலர் மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர்களால் வழங்கப்பட்டு, ஏற்கெனவே உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அவ்வாணைகளின் அடிப்படையில் தேர்வு நிலை / சிறப்பு நிலை நிர்ணயம் நிலுவை செய்து அதற்கான தொகையினை சார்ந்த ஆசிரியர்களுக்கு உடனடியாக பெற்று வழங்குதல் சார்பாக உண்டியல்களைத் தயாரித்து முழுவடிவில் சார்ந்த கருவூலங்களில் சமர்ப்பிக்குமாறும் நிலுவையினை விரைவில் பெற்று வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அனைத்து மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அவ்வாறு நிலுவைத் தொகையை பெற்று வழங்கப்பட்ட விவரத்தினை ஏற்கெனவே 01.12.2013 நாளிட்ட மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ள படிவத்தில் பணிந்தனுப்புமாறும் தெரிவிக்கலாகிறது.

இப்பொருள் சார்பாக பள்ளிக் கல்வி முதன்மை செயலாளர் அவர்களால் 04.12.2013 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆய்வில் இப்பணியினை விரைவில் மேற்கொண்டு நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை முடிக்க அறிவுறுத்தப்பட்டமையால் இப்பணியில் சுணக்கம் ஏதுமின்றி தனிக்கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர்களுக்கும் மீண்டும் தெரிவிக்கலாகிறது.

பெறுநர்
அனைத்து மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர்கள்.

www.kalvikural.com